மீன்கள் பொதுமக்களுடைய காட்சிக்காக வைக்கப்படுகின்றன. நீண்ட நெடுங்காலமாக மெரினா கடற்கரையிலே மீன்காட்சி சாலையிருக்கிறது. அண்மையில், ரூ. 1.18 இலட்சம் செலவில் இது புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஓசுனேரியம் என்று சொல்லப் படுவது மீன் மட்டும் அல்ல, கடலில் உள்ள உயிரினங்கள் அத்தனையும் பொதுமக்கள் காட்சிக்காக வைக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட ஒரு செயற்குறிப்பு அரசுக்கு வந்தது, அது, மெரினா கடற்கரை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வகுக்கப்பட்ட சிறப்புக் குழுவினுடைய பார்வைக்கு வைக்கப்பட்டு, அந்தக் குழு இதை நடைமுறைப்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறது மீன்துறை இயக்குநர் அவர்களும், தலைமைப் பொறியாளர் அவர்களும், ரூ. 31.5 இலட்சம் செலவாகும் என்று மதிப்பீடு தந்திருக்கிறார்கள். இது அந்தக் குழுவினால் பரிசீலிக்கப் படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீன் உணவு மக்களுக்கு எளிதாகக் கிடைக்க தேவையான ஸ்டால்கள் வேண்டு மென்றார்கள். சென்னையிலும் முக்கியமான நகரங்களிலும் இத்தகைய ஸ்டால்கள் உள்ளன. அதில், நல்ல வளமான மீன்கள், தனியார் கடைகளைவிடக் குறைந்த விலையில் கிடைக்கும் அளவுக்கு நல்லமுறையில் அவை பணியாற்றி வருகின்றன. அதை விரிவுபடுத்தும் நோக்கமும் அரசுக்கு இருக்கிறது.

(முற்பகல் 9—10)

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மீன் உணவு மிகவும் சுவையானதாக இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி என்றால் அவர்கள் சாப்பிட்டு பார்த்து இருக்கிறார்களா? அப்படியில்லை என்றால் அவர்கள் எப்படி சுவையாக இருக்கிறது என்று சொல்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, நான் சாப்பிட்டு பார்த்த காரணத்தால் தான் சுவையாக இருப்பதாகச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தைரியமாக சாப்பிடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ளவர்கள எண்ணிக்கை

*வினா எண். 23—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ளவர்களின் எண்ணிக்கை கூடுதலாகி இருக்கிறதா? அல்லது குறைவாகி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறம் 57.48 விழுக்காடு. நகர்புறம் 45.45 விழுக்காடு மாநிலம் முழுவதும்53.85 விழுக்காடு,கிராமப்புறத்தில் அதை ஜனத்தொகையில் சொல்லவேண்டுமானால், 1,85,99,378 பேர், நகர்ப்புறத்தில் 63,81,719 பேர். மாநிலம் பூராவும் சொல்ல வேண்டுமானால் 2,49,81,903 பேர்கள்.

திரு. செ.சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல திட்டங்கள் தீட்டியும் அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய பகுதிகளிலே வறுமைக்கோடு வளர்ந்து கொண்டே வருவதாகத் தான் தெரிகிறது. அப்படி இருப்பதற்கு என்ன காரணம்? அந்த திட்டங்களுடைய பலன்கள் எல்லாம் எங்கே போகிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரம் எனக்குத் தெரியவில்லை; மத்திய அரசைத் தான் கேட்க வேண்டும்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 75 பைசா வருமானம் உள்ளவர்கள் தான் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் என்று மத்திய அரசு சொல்கிறது. ஆனால் நம்முடைய அரசு 35 ரூபாய் முதியோர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுத்துக் கொண்டு வருகிறது அவர்கள் எல்லாம் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்களா அல்லது மேலே இருக்கிறார்களா என்பதைப் பற்றி அரசு கணக்குச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, முதியோர் ஓய்வு ஊதியத் தொகை கொடுக்கிறோம் என்றால் அவர்களுக்கு அந்தப் பணத்தைக் கொடுத்தால்தான் ஓரளவு சாப்பிட முடியும் என்று நினைத்துக் கொடுக்கிறபோது அவர்களும்வறுமையில்தான் இருக்கிறார்கள் என்று பொருளாகும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இந்த வறுமைக்கோட்டைப் பற்றிக் கூறுகிற நேரத்திலே, கிராமப்புறங்களில் 57 சதவிகிதம் என்றும் நகர்புறங்களில் 45 சதவிகிதம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். கிராமப்புறத்திலே இருக்கிற அதிகமாக அந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களை முன்னேற்றுவதற்காக ஏதாவது அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமங்களினுடைய வளர்ச்சிக்காகத் தான் இந்த அரசு பலவிதமான திட்டங்கள் போட்டு அன்றாடம் நிறைவேற்றி வருகிறது என்பது நாட்டு மக்களுக்கும், சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும்.

1983 சனவரி 28]

திரு. ரா. கிருஷ்ணன்; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களை, வறுமைக் கோட்டிலேயிருந்து நீக்குவதற்காகச் செய்யவேண்டிய ஒரு முக்கியமான வேலை என்னவென்றால், நிலங்களைப் பிரித்துக் கொடுப்பதுதான் என்று மஹாலானோபிஸ் கமிட்டியின் பரிந்துரை இருக்கிறது. அப்படி கிராமங்களிலே உள்ள சாதாரண மக்களை, சாமானியர்களை மேம்படுத்துவதற்காக இந்த அரசு அந்தக் கமிட்டியினுடைய ரிப்போர்ட்டை எந்த அளவுக்கு அமுல்படுத்துகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கமிட்டியினுடைய ரிப்போர்ட் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரைக்கும் நடைமுறையாகப் பார்க்கிறபோது, எங்கெங்கே விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்களோ அவர்கள் வறுமைக்கோட்டிலேயும், எங்கெங்கே தொழில்கள் அதிகமாக வளர்ந்து இருக்கின்றனவோ அங்கே வறுமைக்கோடு நீங்கிக் கொண்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய கணக்கு.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற கணக்கிலே சுமார் 2½ கோடி பேர்கள் தமிழகத்திலே வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் என்று சொல்வது ஒரு துயரமான கதையாக இருக்கிறது. மத்திய அரசின் கொள்கைகளால் தான் இவ்வாறு பாதிக்கப்பட்டு இருப்பினும், மாநில அரசு இப்படி வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களின் எண்ணிக்கை கூடுதலாகிக் கொண்டே இருப்பதை கவனத்தில் கொண்டு புதிய திட்டங்களை பரிசீலித்து இருக்கிறதா? அப்படி இல்லையென்றால், இனியாவது முயற்சிகள் ஏதாவது செய்து ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் தமிழ்நாட்டில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று கேட்டதற்கு மட்டும் நான் பதில் சொன்னேன். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் என்பது இந்தியா பூராவிலும் மாநிலத்திற்கு மாநிலம் ஒரு சில சதவிகித வித்தியாசத்தில் மாறியிருக்கிறது. இந்தியா பூராவிலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் இருக்கிறார்கள்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறுமைக்கோடு என்பது எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் கிராமப் புறத்திற்கும் நகர்ப் புறத்திற்கும் ஏன் வித்தியாசம் வருகிறது? அதிகமான அளவிற்கு கிராமப் புறம் புறக்கணிக்கப்

படுகிறதா? நகர்ப்புறத்திற்கு அதிகமான அக்கறை காட்டப்படுகிறதா? இதன் காரணமாகத்தான் அந்த வித்தியாசம் வருகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கிறபோது சொல்லியிருக்கிறேன். அதைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். எங்கெங்கே விவசாயத்தை நம்பி வாழ்கிறார்களோ அந்தப் பகுதியில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் அதிகமாகவும், விவசாயம் அல்லாமல் மற்றத் துறைகளில், தொழிற்சாலைகளில், அலுவலகங்களில் வேலை செய்பவர்கள் இருக்கும் பகுதிகளில் வறுமைக்கோடு என்பது கொஞ்சம் குறைவாக இருக்கிறது என்று நான் முதலில் தெரிவித்து இருக்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் பட்டியலை வருவாய்த் துறை அலுவலர்கள் கணக்கு எடுக்கிறார்களா அல்லது வேறு துறையைச் சேர்ந்தவர்கள் கணக்கு எடுக்கிறார்களா என்பதை அறியவிரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் தேசிய மாதிரிக் கணக்கு எடுப்புத் துறை மூலமாக அவைகள் கணக்கு எடுக்கப்படுகிறது.

அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அளிக்கப்பட்ட
அரசு புறம்போக்கு நிலம்.

*வினா எண். 24—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அரசு புறம்போக்கு நிலம் அளிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில் வழங்கப்பட்ட அரசு நிலம் எவ்வளவு?

(இ) இதற்கு அரசு வசூலித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்.

(ஆ) 18.99 ஏக்கர்.

(இ) ரூ.10,962.69.

திரு. பெ. திருமாறன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நிறுவனங்களுக்கு தமிழக அரசு இலவசமாக நிலங்களைக் கொடுத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.